**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 209/2022

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் நாள் செவ்வாய் கிழமை PW1-ன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S. மும்தாஜ், B.Sc., B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.12.2024 | தந்தை பெயர்: | |
| பெயர்: | சண்முகம் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தொழில்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1) 10.07.2019 3 ம் பிரதிவாதி 2 ம்பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவண சான்று நகல் வா.சா.ஆ. 1 ஆகவும்
2) 23.02.2018 மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண். 82/2012 தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நகல் வா.சா.ஆ. 2 மற்றும் 3 ஆகவும்
3) வில்லங்ச்சான்று பதிவிறக்க நகல் வா.சா.ஆ.4 ஆகவும்
4) மேல் முறையீட்டு மனு 6/2020 அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆகவும்
5) E court மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட மேல் முறையீட்டு மனுவின் தகவல்கள் வா.சா.ஆ. 6 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது. தாவபடி தீர்வாக வேண்டுகிறேன்.